கிராமின் கிருஷி மவுசம் சேவா
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 17-02-2023**

**விருதுநகர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-02-17 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-02-18 | 2023-02-19 | 2023-02-20 | 2023-02-21 | 2023-02-22 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 1.0 | 0.0 | 0.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 34.0 | 34.0 | 35.0 | 35.0 | 35.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 19.0 | 20.0 | 20.0 | 21.0 | 21.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 90 | 90 | 80 | 70 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 30 | 20 | 30 | 20 | 20 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 4.0 | 6.0 | 4.0 | 8.0 | 8.0 |
| காற்றின் திசை (கோணம்) | 20 | 20 | 50 | 20 | 360 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 0 | 3 | 0 | 0 | 0 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் நாட்களில் லேசான மேகமூட்டத்துடன் காணப்படும். 19.02.2023 அன்று மிக லேசான மழை என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34.0°C முதல் 35.0°C ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 19.0°C முதல் 21.0°C ஆகவும், காலைநேர காற்றின் 70 முதல் 90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 20 முதல் 30 சதவிகிதமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. அடுத்த 24 மணி நேரகாற்றின் வேகம் 4.0 முதல் 8.0 கி.மீ வரை இருக்கும் என்றும், காற்றின் திசை வடக்கு திசையில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பொது ஆலோசனை:

19.02.2023 அன்று மிக லேசான மழை பெய்யும் என்று கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் பயிர்களின் தேவை மற்றும் மண்ணின் ஈரப்பதத்தின் அடிப்படையில் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**குறுஞ்செய்தி :**

மிக லேசான மழை. விவசாயிகள் பயிர் தேவையின் அடிப்படையில் நீர்ப்பாசனத்தை திட்டமிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:**

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நிலக்கடலை | நிலக்கடலையில் அசுவினி, தத்துப்பூச்சி மற்றும் இலைப்பேனின் தாக்கம்: 1. மஞ்சள் நிற அல்லது பச்சை கலந்த மஞ்சள் நிற இலைகள். 2. இலைகளின் ஓரம் எரிந்தது போன்றும் காணப்படும்.3. இலைகளின் அடியில் வெளிர்நிற கோடுகள் தென்படும்.4. செடியில் வளர்ச்சி குன்றி காணப்படும். மேலாண்மை: 1.மஞ்சள் வண்ண அல்லது நீல வண்ண ஒட்டும்பொறி 5 எண்ணிக்கை/ ஏக்கர் . 2. வேப்பங்கொட்டை சாறு 5%தெளித்தல். 3. இமிடா குளோ:ப்ரிட் 17.8 SL 100முதல் 125 மில்லி/எக்டர் தெளித்து கட்டுப்படுத்தவும். |

**தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:**

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கொய்யா | கொய்யா பழத்தின் ஸ்டைலர் முடிவு அழுகல் நோய் : அறிகுறிகள்: 1. பழத்தின் ஸ்டைலர்முடிவு பகுதியில் அழுகல் காணப்படும். நாளடைவில் அழுகிய பகுதி விரிவடைந்துவிடும். 2.பழத்தின் தோல் சுருங்கியும் பூஞ்சாணத்தின் வித்துத் திறன்களைக் கொண்டிருக்கும். 3. பழத்தின் சதைப்பகுதி அழுகியும், நிறமாறியும் தோன்றும். 4. இறுதியில் பழத்தின் அளவு சிறுத்து பழம் அழுகிவிடும். நோயின் மேலாண்மை முறைகள் : பழம் முதிர்ச்சியடையும் நிலையில் கீழ்க்கண்ட பூஞ்சாணக் கொல்லிகளை நோயின் வீரியத்தைப் பொறுத்து ஒருமுறை அல்லது இரண்டுமுறை தெளிக்கலாம்.1.கார்பென்டாசிம் (0.1%). 2. தயோபனேட் மீதைல் (0.5கிராம்/லிட்டர்) 3.பழத்தின் மீது காயங்கள் ஏதும் தோன்றாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். மேலும் பழங்களை சுற்றிலும் பேப்பரைக் கொண்டு மூடி பாதுகாக்கலாம். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வெள்ளாடு | ஆட்டுஅம்மை நோய்: 1. இந்நோய் வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளில் வெயில் காலங்களில் ஒருவகை நச்சுயிரியினால் ஏற்படும். 2. பாலூட்டும் ஆடுகளையும், கிடாக்களையும் அதிகமாக இந்நோய் தாக்கும். 3. பாதிக்கப்பட்ட ஆடுகளிலிருந்து நேரடித் தொடர்பின் மூலமாகவும் மாசுப்பட்ட தீவனம் மற்றும் தண்ணீர் மூலம் இந்நோய் பரவுகிறது. அறிகுறிகள்: அதிக காய்ச்சல்,சோர்வு இதனை தொடர்ந்து உடலில் ரோமங்களற்ற பகுதிகளில் குறிப்பாக உதடுகள், மூக்கு ,வாயின் உட்சவ்வு, கண்கள், பால்மடி, தொடைப்பகுதி, வாலின் அடிப்பகுதி போன்ற இடங்களில் அம்மை கொப்புளங்கள் உருவாகும். தடுப்புமுறை: முதல் தடுப்பூசி 3 மாத வயதிலும் பின்னர் வருடந்தோறும் பிப்ரவரி -மார்ச் மாதங்களில் தடுப்பூசி செலுத்தவேண்டும். சிகிக்சை: 1. நோயுற்ற ஆடுகளை தனியே பிரித்து சிகிக்சையளிக்க வேண்டும். 2. புண்களில் போரிக் பவுடர் மற்றும் கிளிசரின் கலந்த கலவையை மருந்தாக பூசவேண்டும். 3. 3 முதல் 5 நாட்களுக்கு நோய் எதிர் உயிரி மருந்து சிகிக்சையளிக்கவேண்டும். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| சிக்கன் | கோழிப்பண்ணையாளர்களுக்கான கோடைக்கால பராமரிப்பு உத்திகள்: 1. கோழிகளுக்கிடையே இடநெருக்கடியை தவிர்க்கவேண்டும். 2. கோழிகளுக்கு வெப்பம் குறைந்த காலை/மாலை நேரங்களில் தீவனமளிக்க வேண்டும். தீவனத்தில் நீர் தெளித்து வைக்கலாம். 3. வைட்டமின் சி மற்றும் பி -காம்ப்ளக்ஸ் மருந்துகளை தண்ணீருடன் கலந்து வைக்கவேண்டும். 4. தண்ணீர் தொட்டிகளை ஈரமான சாக்குபைகளை கொண்டு மூடிவைக்கவேண்டும்.5.தண்ணீர் அளிக்கும் அளவை அதிகரிக்கவேண்டும்.குறைந்தகால இடைவெளியில் தண்ணீர் அளிக்கவேண்டும். 6. கொட்டகையின் கூரை மீது நீரை தெளிப்பதன் மூலம் கொட்டகையின் உள் வெப்பத்தை குறைக்கலாம். 7. கொட்டகையின் பக்கவாட்டில் ஈரமான/ நனைந்த சாக்கினை தொங்கவிடுவதன் மூலம் உள் வெப்பத்தை குறைக்கலாம். |

## பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பொது ஆலோசனை | விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு 10-15 என்ற எண்ணிக்கையில் மஞ்சள் வண்ண ஒட்டும் பொறி அட்டைகளை வைத்து சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டத்தையும் ஒரு ஏக்கருக்கு 5-10 என்ற எண்ணிக்கையில் நீல வண்ண ஒட்டும் பொறி அட்டைகளை வைத்து அசுவினி மற்றும் இலைத் துளைப்பான் நடமாட்டத்தையும் கண்காணிக்கவும். |

